**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No.139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**36 |
| Name | : | **சங்கீதா** |
| Husband Name | : | **விஜய்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 30/2025 |

**தேதி : 08.10.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. எதிரி வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் செட்டிக்குளத்தில் வசித்து வருகிறேன். நான் ஆலத்தூர் தாலுக்காவில் புல உதவியாளராக பணியாற்றி வருகிறேன். எதிரி வசந்தியை எனக்கு தெரியும். கடந்த 16.04.2024 முதல் 07.07.2024 வரை எதிரி வசந்திக்கு எனது SBI வங்கி கணக்கிலிருந்து ரூ.56,000/-த்தை தவணைகளாக அனுப்பினேன். அவரே மாத தவணைகளை செலுத்திவிடுவதாக கூறியதால் கடன் பெற்றுக்கொடுத்தேன். எதிரி எந்த தவணையும் திரும்ப செலுத்தாததால் நிதி நிறுவனத்தின் ஊழியர்கள் எங்களிடம் வந்து தவணைகளை செலுத்துமாறு கேட்டனர். எதிரியை தேடி பார்த்தபோது அவர் தலைமறைவாகிவிட்டது தெரியவந்தது. தற்போது வரை மேற்படி நான் கடன் பெற்று தந்த தொகைக்கான நான்தான் தவணை கட்டிவருகிறேன். பின்னர் இதுசம்மந்தமாக சத்தியா

என்பவர் புகார் கொடுத்தார். குற்றப்பிரிவு போலீஸார் என்னை விசாரித்து 27.07.2024 அன்று விசாரணை செய்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் தற்போது சொன்ன விவரங்களைத்தான் போலீஸார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சரிதான். வசந்திக்கும், எங்க வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 500மீட்டர் இருக்கும். வசந்தி எப்போது வாடகைக்கு சென்றார் என்றால் தெரியாது. எத்தனை வருடமாக வசந்தி அந்த வாடகை வீட்டில் குடியிருக்கிறார் என்றால் தெரியாது. வசந்தியிடம் ஏற்கெனவே பணம் கொடுப்பதற்கு முன்பு பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. கடன் கொடுத்த வகையில்தான் வசந்தி எனக்கு பழக்கமானார். வசந்தி ஏற்றுக்கொண்ட வகையில் தவணை தொகையை முறையாக செலுத்திவந்தாரா என்றால் 4 வது மாதத்தில் இருந்து கட்டிவந்தார். அதற்கு பிறகுதான் கட்டவில்லை.

நான் கடன் தருவதற்கு முன்பு வசந்தி யாரையாவது ஏமாற்றினார் என்று கேள்விப்படவில்லை என்றால் சரிதான். நான் எந்த நிறுவனத்திடமிருந்து கடன் வாங்கிகொடுத்தேன் என்று போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கடன் கொடுத்தற்காக எதிரியிடமிருந்து புரோநோட் அல்லது வேறு எந்த ஆவணமும் பெறவில்லை என்றால் சரிதான். சரியாக தவணை செலுத்திவிடுவதாக கூறிதான் என்னிடம் கடனை பெற்றார் என்றால் சரிதான். வசந்தியின் மாமனாரை எனக்கு தெரியும். எதிரியின் தங்கைக்கு அபார்சன் ஆனதாலும், மாமனாருக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தினாலும் கடன் கேட்டதாக நான் போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணம் வசந்திக்கு இல்லை என்றாலும், 30,. 40 பேர் ஒருசேர கடன் கேட்டதால் அவரால் கடனை செலுத்த இயலவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வசந்திக்கு என்னை ஏமாற்றவேண்டும் என்ற எண்ணம் இல்லை

என்றாலும், போலீஸார் சொல்லிக்கொடுத்துதான் நான் இவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1(FAC)
Perambalur.